திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர். திரு. கே. சிவக்குமார் அவர்கள்

ந.க.எண். 09425/2025/எப்2, நாள். 03.04.2025

பொருள்..	மனை அங்கீகாரம் – திண்டுக்கல் மாநகராட்சி – மாநகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 6, பிளாக் எண். 43, நகரளவு எண்.1685 –ல் 6443 ச.மீ (1.59ஏக்கர்) –ல் உள்ள மணைப்பிரிவிற்கு அனுமதி வழங்குவது – சம்மந்தமாக..
பார்வை..	1) தானப்பத்திரம் எண். 3941/2024, நாள். 08.07.2024 மற்றும் 3946/2024, நாள். 08.07.2024 2) மாமன்ற தீர்மான எண். 1664, நாள். 24.03.2025. 3) உறுப்பினர் செயலர், திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். LLG63E77/2024/TCP, நாள். 21.10.2024

****

உத்தரவு:–

பார்வை 3–ல் காணும் உறுப்பினர் செயலர், திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் செயல்முறை ஆணையில் திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவு வார்டு எண்.6, பிளாக் எண். 43, நகரளவு எண்.1685 மொத்த மனை எண்கள்.28 ஆகும். திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் செயல்முறை உத்தரவு எண். ந.க.எண். LLG63E77/2024/TCP, நாள். 21.10.2024–ல் மணைப்பிரிவு பரப்பளவு 6443.00 ச.மீ (1.59 ஏக்கர்) ஆகும். மேற்படி, மணைப்பிரிவிற்கு திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமத்தால் மணைப்பிரிவு அனுமதி எண். SWP/LPA/Dindigul/Layout No:– 47/2024, SWP/LPA/Dindigul/Planning Permission No:– 53/2024 – ஆகும். மணைப்பிரிவில் பொது உபயோக இடமான சாலை இடத்தினை மற்றும் பொது உபயோக பகுதியையும், திண்டுக்கல் மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் (மணைப்பிரிவின் உரிமையாளரால்) வழங்கப்பட்டுள்ளது. தானப்பத்திர எண்கள். 3941/2024, நாள். 08.07.2024 மற்றும் 3946/2024, நாள். 08.07.2024– மூலம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி, மணைப்பிரிவில் உள்ள சாலை வசதி, வடிகால் மற்றும் மின் கம்பங்கள் ஆகியவை மாநகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள பார்வை 2–ல் காணும்

மாமன்ற தீர்மான எண். 1664, நாள். 24.03.2025-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திண்டுக்கல் உள்ளூர் திட்டக்குழுமம் வழங்கப்பட்ட மனைப்பிரிவு அங்கீகார வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மாநகராட்சியால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. மேலும், நில உரிமை குறித்து அரசு அலுவலகங்களுக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என்று அறியப்பட்டாலும், மனைப்பிரிவிற்கு ஏதேனும் பாதிப்புகள் ஏற்பட்டாலும், இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அ ங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி மாநகராட்சியால் ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

3/4/25

செயற்பொறியாளர்(தி),
திண்டுக்கல் மாநகராட்சி.

இணைப்பு..

3.4.25.

1. வரைபட நகல்.
2. உள்ளூர் திட்டக்குழுமத்தின் ஆணை
3. உள்ளூர் திட்டக்குழுமத்தின் நிபந்தனைகள்

பெறுநர்..

Mr. Naresh Subramani,
M/S Sai Sukaran Ventures Private Ltd.,
D.No:- 7/10, Cresent Park Road,
Gandhi Nagar, Chennai- 600017

நகல்..

1. உறுப்பினர் செயலாளர்,
   உள்ளூர் திட்டக்குழுமம், திண்டுக்கல்..
2. தனி வட்டாட்சியர்,
   நகரநிலவரித்திட்டம், திண்டுக்கல்.
3. வட்டாட்சியர்,
   கிழக்கு தாலுகா, திண்டுக்கல்.
4. நகரசார் ஆய்வாளர், நிலஅளவை, திண்டுக்கல் மாநகராட்சி ஆவணங்களை உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள பணிக்கப்படுகிறார்.
5. நகரமைப்பு ஆய்வர் – தொடர் நடவடிக்கை மேற்கொள்ள